1973 நவம்பர் 21]

திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆமெனில், இது தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

Election to the Madras Corporation

*26 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the election to the Madras Corporation scheduled to be held in November is to be postponed;

(b) if so, the reason for such postponement; and

(c) when the election is likely to be held?

சென்னை மாநகராட்சித் தேர்தல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நவம்பர் திங்களில் நடைபெறவிருந்த சென்னை மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படவிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவ்வாறு ஒத்திவைக்கக் காரணம் என்ன?

(உ) அத்தேர்தல் எப்போது நடத்தப்படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) மின்வெட்டின் காரணமாக வாக்காளர் பட்டியல் அச்சிடுதல் குறித்த காலத்தில் முடிவுபெறவில்லை. எனவே அக்டோபர் 73-ல் மாநகராட்சித் தேர்தலை நடத்துவது இயலாததாயிற்று. ஆதலின் மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(உ) மாநகராட்சித் தேர்தல் ஏப்ரல் 1974-ல் நடைபெறவிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மின்சார இலாகா ஊழல் சம்பந்தமாக, நேற்றைய தினத்தில் நகரசபை கலைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அப்படியே நகரசபை கலைக்கப்பட்டு விடலாம் என்று தெரிகிறது. கலைக்கப்படுவதற்கு முன்பு இந்தத் தேர்தல் ஏப்ரலில் நடைபெறுவதாக இருந்தது. தற்போது கலைக்கப்பட்ட பிறகு ஏப்ரலிலேயே நடைபெறுமா அல்லது நீட்டித்துப் போகுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : There is difference between the Corporation and Municipalities. The Hon. Minister answers with regard to the Corporation and not the Municipalities.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நான் மாநகராட்சியைப் பற்றித் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நவம்பரில் நடக்கவிருந்த தேர்தல் ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது; தற்போது மாநகராட்சி கலைக்கப்பட்டு விட்டது; அதற்குப் பிறகும் தேர்தல் ஏப்ரலில் நடக்குமா என்பது என் கேள்வி. அது ஆராய்ச்சியில் இருக்கிறதா, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கலைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கலைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மசோதா வரும் போது இதுபற்றி விவரமாக, தெளிவாக அறிக்கை கொடுக்கப்படும்.

Pallavan Transport Corporation

* 27 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Pallavan Transport Corporation has conducted an experiment on radial and feeder services in some parts of Madras City;

(*b*) if so, the routes in which such experiments were conducted; and

(*c*) the result thereof?